1984 மார்ச் 31]

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுமா ? அதுபோல் மதுராந்தகம் பெரிய ஏரியில் தூர் வாருவதற்கு ஏற்கனவே ஆய்வுகள் செய்யப்பட்டதா ? அந்தத் திட்டம் எப்போது செயலுக்கு வரும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் ஏரியில் தூர் வாருவது பற்றி இங்கே என்னிடம் தற்போது எந்த குறிப்புகளும் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற போது 31 ஏரிக்கு இந்தக் கால்வாய் தண்ணீர் கொண்டு பயன் பெறும் என்றும் சுமார் 1,000 ஏக்கர் நிலம் பயன்பெறும் என்றும் சொன்னார்கள். இவ்வளவு சொன்னபோது எவ்வளவு ரூபாய் அந்தத் திட்டத்திற்கு ஆய்வுக்கு ஒதுக்கினார்கள் ? எவ்வளவு எஸ்ட்டிமேட் என்று சொன்னார்கள் ? இயற்கை சூழ்நிலையினால் திடீர் என்று மழை பெய்தால் இந்த 31 ஏரிகளிலும் தண்ணீரை தேக்கி வைத்துக்கொள்ள வசதியாக இருக்கும். ஆகவே இதை உடனடியாக எடுத்துக்கொள்ள அரசு முன்னுரிமைக் கொடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டம் போடுகின்ற நேரத்தில் அந்தத் திட்டத்தினால் எந்த எந்த பகுதிகள் பயன்பெறும். அதனால் அந்தப் பகுதியில் எவ்வளவு தூரத்திற்கு பாசன வசதி கிடைக்கும் என்பதை பற்றி ஆரம்ப கட்ட ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் தான் இங்கே விடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. விரிவான ஆய்வுக்குப் பிறகுதான் அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் தேவை போன்ற விவரங்கள் எல்லாம் தெரியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சர்க்காரின் கீழ் இயங்கும் கயிறு வாரியத்திடமிருந்து 1982-83 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு கிடைத்த தொகை.

534—(* வினா எண். 17065)—திரு. டி. மணி : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மத்திய சர்க்காரின் கீழ் இயங்கும் கயர் போர்டி லிருந்து (Coir Board) 1982-83ஆம் ஆண்டில் சுமார் 13 கோடி ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தமிழகத்திற்குக் கிடைத்த பங்கு என்ன ?

(ஆ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் தேங்காய் மட்டை நாரிலிருந்து கயிறு, கயிறுப்பாய், கயிறு மெத்தை தயாரிக்கப்படுகிறது ? அவை எந்தெந்த கூட்டுறவு மையங்களில் தயாரிக்கப்படுகிறது ?

(இ) அரசின் தேவைகளுக்குக் கூட்டுறவு மையங்களிலிருந்து நேரிடையாக வாங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) தமிழ்நாட்டில் கயிறு தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காக ஒரு மண்டல கயிறு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தினை நிறுவிட கயிறு வாரியம் முன்வந்துள்ளது. இந்நிலையத்தினை நிறுவுவதற்காக 1982–83 ஆம் நிதி ஆண்டில் ரூ. 50.90 லட்சம், கயிறு வாரியம் ஒதுக்கி உள்ளது. இந்நிலையம் தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளையார்பட்டி கிராமத்தில் விரைவில் அமையும். கயிறு வாரியம் ஒரு மத்திய அரசின் நிறுவனம். இந்நிறுவனத்திற்கு மத்திய அரசு 1982-83 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கிய தொகை பற்றிய விபரம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) தமிழ்நாட்டில் நீலகிரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் தவிர ஏனைய 14 மாவட்டங்களில் 57 கயிறு மற்றும் கயிறு பொருட்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளது.

(இ) கூட்டுறவு சங்கங்களிடமிருந்து அரசின் தேவைகளுக்கு பொருட்களை வாங்குவதற்கு நான்காவது முன்னுரிமை இடம் அளிக்கப்பட்டுள்ளது. இம்முன்னுரிமை 31-3—1987 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய சர்க்காரின் கயர் போர்டின் கீழ் மாநில அரசுக்கு ஏற்கனவே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். தஞ்சை மாவட்டத்திலே அதற்கு முன்னோடித் திட்டமாக விரைவில் அமையும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்ட விவரம்தான் இது. அது ஆரம்பிக்கப்பட்டு உள்ளதா ? ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணத்திலிருந்து குமரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலமாக இதை அபிவிருத்தி செய்வதற்கு ஏதாவது செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ? சேலம் மாவட்டத்திலேயும் இம்மாதிரி செய்வதற்கு அரசின் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் அரசின் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

1984 மார்ச் 31]

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களிலே அப்படி ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள்; இதைப்போன்ற கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கயிறு, கயிறுபாய், கயிறு மெத்தை போன்றவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அரசின் தேவைக்கு அண்டை மாநிலங்களிலிருந்து வரவழைக்கின்ற நிலைமையைப் போக்க வேண்டும். நம்முடைய மாநிலத்திலேயே ஏற்கனவே சுமார் ஐம்பது இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இந்தத் தொழில் அழிந்து விடாமல் பாதுகாப்பதற்கு, நம்முடைய மாநிலத்திலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கயிறு, கயிறுபாய், கயிறு மெத்தை போன்ற பொருட்களைத் தயாரிப்பதற்காக ஒதுக்கியிருக்கின்ற பணத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக நிதி உதவி செய்து உதவுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கயிறுதொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரை, 1979-ம் ஆண்டு வரை 10 சங்கங்களே இருந்தன. கடந்த மூன்று ஆண்டுகளில் அரசின் தீவிர நடவடிக்கைகளின் பயனாக, தற்பேது 57 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. குடிசைத் தொழில் மற்றும் கிராமத் தொழிலை வளர்ச்சியடையச் செய்யவும், அப்பொருள்களுக்குத் தக்க மார்க்கெட் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களைத் தமிழ் நாடு காதி கிராமத் தொழில் வாரியத்திடமிருந்து வாங்க வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது. காதி கிராமத் தொழில் வாரியத்தினால் வழங்க இயலாதபோது அல்லது அவ்வாரியத்திடம் இல்லாத பொருட்களைக் கீழ்க்கண்ட வரிசை அடிப்படையில் அந்நிறுவனங்களிடம் வாங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது! சிறை மற்றும் சிறைத்துறையின்கீழ் உள்ள நிறுவனங்கள்; நவீனப் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம், முட்டுக்காடு; அரசினால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள், டான்சி உள்பட; கூட்டுறவு நிறுவனங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் கயர்போர்டு மூலமாகத் தென்னையிலிருந்து கயிறுப் பொருட்கள் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா? ஏனென்றால், செங்கற்பட்டு மாவட்டத்தில் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, மதுராந்தகம் வட்டத்தில் அதற்கான வசதிகள் அதிகமாக இருக்கின்றன. மேலும், அரசு அந்த வட்டத்தைப் பின் தங்கிய பகுதியாகவும் அறிவித்திருக்கிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு, அங்கே கயிறு தாயாரிக்கின்ற கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா?

[1984 மார்ச் 31

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தது. எனவே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த நாட்டிற்கு மிகத் தேவையான சங்கங்கள். இதிலே தயாரிக்கப்படும் இந்தக் கயிறு, கயிறுபாய், கயிறு மெத்தை போன்றவைகளைப் பொறுத்தவரையில், அரசுக்குத் தேவையானவற்றிற்கு முதல் முன்னுரிமை கொடுத்தால் அவை அழிந்துபோகாமல் நல்ல முறையில் நிலைமைகள் இருப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, இவைகள் தயாரிக்கின்ற பொருட்களுக்கு அரசு முதல் முன்னுரிமை கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியதைப் போல, காதி கிராமத் தொழில் வாரியத்திடமிருந்து வாங்க வேண்டுமென்றும், அது இல்லாத சமயத்தில் நான் முன்பு சொன்ன சிறை மற்றும் சிறைத் துறையின்கீழ் உள்ள நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1979-80 இல் நடந்த கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், திருட்டுகள் புள்ளி விவரம்.

1—வினா எண் *1563*—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ் நாட்டில் *1979–80*-ல் நடந்த கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், திருட்டுகள் இவைகளின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கப்படுமா ?

விடை—

1979–1980-ல் நடந்த கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், திருட்டுகள் இவைகளின் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	1979	1980
1. கொலைகள் (Murder) ..	953	1,289
2. பெருங்கொள்ளை (Dacoity) ..	47	82
3. வழிப்பறிக்கொள்ளை (Robbery)	306	336
4. கன்னக் களவுகள் (Burglary)	10,289	10,206
5. திருட்டுகள் (Thefts) ..	34,545	34,376
6. கற்பழிப்புகள் (Rape) ..	98	151